|b09291 42packeF (English)

|c09291_000_42packe.xml (Task 179305)

|v1

ஞாயிறு காலைக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு காலைக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

உள் ஆலயத்தைச் சுத்தப்படுத்துதல்

|v6

நல்லொழுக்கம்

|v7

ஆபாசப்படம்

|v8

சுயாதீனம்

|v9

மனந்திரும்புதல்

|v10

பொது மாநாடு

|v11

*உள் ஆலயத்தைச் சுத்தப்படுத்துதல்*

|v12

*தலைவர் பாய்ட் கே. பேக்கர்*

|v13

*பன்னிரு அப்போஸ்தலர் குழுமத் தலைவர்*

|v14

*பகலுக்குப் பின் நிச்சயமாக இரவு வருவதைப்போன்று வேதனையையும் தண்டனைகளையும் துன்மார்க்கம் தடுக்காது என்பதை நியாயமாக்குவது அடிப்படையில் தவறு.*

|v15

*மிகக்குழப்பமும் அபாயமும் நிறைந்த உலகத்தில் நமது வாலிப பிள்ளைகள் எவ்வாறு வாழ்வதென கொஞ்சமும் அறியாது நின்றுகொண்டிருக்கிற ஒரு நேரத்தில் இந்த பொது மாநாடு நடத்தப்படுகிறது. இப்படித்தான் இது இருக்குமென்று வெளிப்படுத்தல்கள் மூலம் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் எச்சரிக்கை செய்து என்ன செய்யவேண்டுமென எப்போதுமே காட்டியிருக்கிறார்கள்.*

|v16

*கர்த்தராகிய தேவனின், உலகத்தின் இரட்சகரின் நாமத்தில்கூட ஒவ்வொரு மனிதனும் பேசவேண்டுமென தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்துக்கு கர்த்தர் வெளிப்படுத்தினார்.1 திறவுகோல்கள் மறுஸ்தாபிக்கப்பட்டபோது, தாத்தாக்கள், தகப்பன்மார்கள், மகன்கள் மூலமாக திறவுகோல்கள் ஒவ்வொரு வீட்டிலுமிருக்க மறுஸ்தாபிக்கப்பட்டபோது அவைகள் ஆசாரியத்துவ அதிகாரத்திற்கு கொடுக்கப்பட்டது.*

|v17

*பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, உலகம் குழப்பத்திலிருந்தபோது, சபை வரலாற்றின் ஐந்தாவது பிரகடமான, “குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனத்தை” பிரதான தலைமையும் பன்னிரு அப்போஸ்தலர் குழுமமும் வெளியிட்டார்கள். ஒரு வெளிப்படுத்தலாக, படிக்கவும் பின்பற்றவும், சபை நன்றாக நடக்க சபையின் அங்கத்தினர்களுக்கு இது ஒரு வழிகாட்டியாகவுமிருந்து வேத விவரங்*

களின்படி தகுதியாயிருக்கிறது.

|v18

அதின் ஒரு பகுதி விவரிக்கிறது: “ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான திருமணம் தேவனால் நியமிக்கப்படுகிறதென்றும், அவரது பிள்ளைகளுக்கான நித்திய இலக்கிற்கான சிருஷ்டிகரின் திட்டத்திற்கு குடும்பம் மையமாயிருக்கிறதென்றும், பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் பிரதான தலைமை மற்றும் பன்னிரு அப்போஸ்தலர்களாகிய நாங்கள் பயபக்தியாக பிரகடனப்படுத்துகிறோம்.

|v19

தங்களின் சொந்த சாயலில் மனிதனை ஒழுங்குபடுத்தவும், ஆணும் பெண்ணுமாக தேவர்களின் சாயலில் அவர்களை வடிவமைக்கவும் தேவர்கள் கீழிறங்கி வந்தார்கள்.

|v20

அவர்கள் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை பலனுள்ளவர்களாக்கி, அவர்கள் பூமியில் பலுகிப்பெருகி அதை நிரப்புவார்களென்றும் தேவர்கள் சொன்னார்கள்.

|v21

இந்த கட்டளை எப்போதுமே ரத்தாகாது.

|v22

அவர்கள் செய்யும்படி தேவன் கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவர்கள் செய்கிறார்களா என அவர்கள் அவர்களை சோதிப்பார்கள்.4

|v23

“சந்தோஷமாயிருக்கவே மனுஷன் பிழைத்திருக்கிறான்”5 என்பதற்காக நாம் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்பதே அதன் நோக்கம்.

|v24

மனிதன் சுயாதீனமாயிருக்கிறான், “தாங்களுக்குத் தாங்களே செயல்படுகிறவர்களாயும், கற்பனைகளின்படியே அந்தப் பெரிதும், கடைசியுமான நாட்களிலே, நியாயப்பிரமாணத்தின் தண்டனைகளைத்தவிர வேறொன்றாலும் அவர்கள் செயல்படுத்தப்படாமலிருக்க சுயாதீனமாயிருக்கவேண்டும்”6 என லேகி

போதித்தான்

|v25

பொல்லாங்கனின் விருப்பத்தைவிட நமது சுயாதீனம் மிகுந்த வல்லமையுள்ள தென்ற ஒரு கோட்பாட்டு நிச்சயத்தை “கர்த்தர் எனக்கு வாக்களித்தார், பொல் லாங்கன் எனக்கு எதிராக வாக்களித்தான், ஆனால் என் வாக்குச்சீட்டே முக்கி யமாயிருக்கிறது.” என்ற பழமொழி விவரிக்கிறது. சுயாதீனம் விலையேறப்பெ ற்றது. முட்டாள்தனமாக, கண்ணை மூடிக்கொண்டு அதை நாம் கொடுத்துவி ட லாம், ஆனால் அதை நம்மிடமிருந்து கட்டாயப்படுத்தப்பட்டு எடுத்திட முடியாது.

|v26

“பிசாசானவன் அதை என்னைச் செய்யவிட்டான்” என்ற ஒரு பழைய சாக்குப் போக்கும் உண்டு. அப்படியல்ல! அவன் உங்களை ஏமாற்றலாம், உங்களை த வறாக நடத்தலாம், ஆனால் அக்கிரமம் செய்யவோ அல்லது உங்களை அக்கிர மத்தில் வைக்கவோ உங்களையோ வேறு யாரையோ கட்டாயப்படுத்த அவ னுக்கு வல்லமை இல்லை.

|v27

ஜீவனை உருவாக்குகிற சக்தியுடன் பொறுப்பளிக்கப்பட்டவையுடன் மிகுந்த ச ந்தோஷமும் மிகுந்த அபாயகரமான சோதனைகளும் இருக்கின்றன. அநித்திய வாழ்வின் வரமும், மற்றவர்களுடைய ஜீவனை உருவாக்கும் சக்தியும் ஒரு தெ ய்வீக ஆசீர்வாதம். வேறு எதிலுமில்லாமல் இந்த வல்லமையின் நீதியான செய லின் மூலம் நமது பரலோகப் பிதாவிற்கு நாம் நெருக்கமாகி, சந்தோஷத்தின் ஒ ரு முழுமையை நாம் அனுபவிக்கலாம். இந்த சக்தி மகிழ்ச்சியின் திட்டத்தின் ஒரு உதிரிப்பாகமல்ல. அது ஒரு திறவுகோலாக இருக்கிறது.

|v28

அதன் தெய்வீக நோக்கத்திற்கு நித்திய பிரமாணங்கள் தேவையாகவோ அல்ல து மறுக்கிறதாகவோ நாம் இந்த சக்தியைப் பயன்படுத்தினால் நாம் யாராக மாறுகிறோமென்பதை என்றென்றைக்குமாக அது தீர்மானிக்கும். “நீங்கள் தே வனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வா சமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?”7

|v29

நமது பரலோகப் பிதாவிற்கும் நமது தேவனுக்கும் கீழ்ப்படிதலாயிருக்க தனது சொந்த சுயாதீனத்தில் அவன் அல்லது அவள் தீர்மானிக்கும்போதும், ஜெபத்தி ல் அந்த வாஞ்சையை வெளிப்படுத்துகிறபோதும் அங்கே ஒரு விடுதலை வரு கிறது.

|v30

நாம் கீழ்ப்படியும்போது, திருமண உடன்படிக்கையில் இந்த சக்திகளை நாம் அனுபவிக்கிறோம். நமது வாழ்வின் ஊற்றுக்களில் நமது பிள்ளைகளும் நமது குடும்பமும் வருகிறது. நமது வாழ்நாள் முழுவதிலும், கணவனுக்கும் மனைவிக்குமிடையிலுள்ள அன்பு நிரந்தரமாயிருந்து நிறைவையும் திருப்தியையும் கொண்டுவர முடியும்.

|v31

அநித்தியத்தில் இந்த ஆசீர்வாதங்கள் ஒருவனுக்கு மறுக்கப்பட்டிருந்தால், வரப்போகிற உலகத்தில் அவர்களுக்கு அவைகள் கொடுக்கப்படுமென வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

|v32

நித்தியமாய் உண்மையாயிருத்தலுக்கான ஒரு பொருத்தனைக்குப் பின்பும், ஒரு சட்டப்பூர்வமான, விதிகளுக்குட்படுவதுமான ஒரு சடங்கிற்குப் பின்பும், ஆலயத்தின் முத்திரிக்கும் நியமத்திற்குப் பின்பும் மட்டுமே வரக்கூடிய தூய்மையான ஊகங்களின் அன்பே, அன்பின் முழுமையான வெளிக்காட்டுதலுக்காக கொடுக்கப்படும் ஜீவனைக் கொடுக்கும் அந்த வல்லமைகள். என்றென்றைக்கும் நமது துணையாயிருக்கிற ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலேயும், கணவனுக்கும் மனைவிக்குமிடையிலே மட்டுமே அது பகிர்ந்து கொள்ளப்படவேண்டும்.

|v33

கட்டளைகளை உதாசீனப்படுத்த நமக்கு சுதந்தரமிருக்கிறது, ஆனால், “செய்யாதிருப்பாயாக” என்பதைப்போன்ற நேரிடையான வார்த்தைகளால் வெளிப்படுத்தல்கள் பேசும்போது அதற்கு நாம் கவனம் செலுத்துவது நல்லது.

|v34

ஜீவனைக் கொண்டுவருவதற்கான வல்லமையைக் கொண்டிருக்கும் அனைவரிடத்தின் மேலும் பொல்லாங்கனுக்கு பொறாமை உண்டாகிறது. “தன்னைப்போல மனுஷர் யாவரும்  துர்ப்பாக்கியவான்களாய் இருக்க அவன் வகைதேடுகிறான்”.8 தவறான உறவுகளுக்கு உங்களை சோதிப்பதன் மூலமாக, நீதியின் வழியில் ஜீவனைக் கொடுக்கும் வல்லமைகளின் பயனுக்கு மதிப்பைக் குறைக்க அவன் வகைதேடுகிறான்.

|v35

அவரைப் பின்பற்றுகிறவர்கள் புரிந்துகொள்வதற்காக “ஒப்பாயிருக்கிறதென்ற”

*பதத்தை கர்த்தர் பயன்படுத்துகிறார்:*

|v36

*“பரலோகராஜ்யம் வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.”9*

|v37

*“பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது”.10*

|v38

*நமது காலத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக நோயைப் பரப்பி, இரக்கமின்றி ஒவ்வொரு வீட்டையும், அநேகமாக கணவன் மூலமும் தகப்பன் மூலமும் கைப்பற்ற முயற்சித்து, ஆபாசப்படங்களின் மிகக் கொடுமையான ஆதிக்கம், ஒரு கொடிய நோயைப்போன்று உலகம் முழுவதிலும் பரவிக்கொண்டிருக்கிறது. துரதிருஷ்டவசமாக இந்த கொடிய நோயின் பாதிப்பு எப்போதுமே ஆவிக்குரியவற்றிற்கு பேரிழப்பாயிருக்கும். “மகா மகிழ்ச்சியின் திட்டமான”12 “மகா மீட்பின் திட்டத்தைத்”11 தகர்க்க பொல்லாங்கன் வகை தேடுகிறான்.*

|v39

*ஆபாசப்படங்கள் எப்போதுமே கிறிஸ்துவின் ஆவியை தள்ளிவிடும், நமது பரலோகப் பிதாவுக்கும் அவரது பிள்ளைகளுக்குமிடையிலுள்ள தொடர்பை தடங்கல் செய்து கணவன் மனைவிக்கிடையிலுள்ள மென்மையான உறவைத் தகர்க்கும்.*

|v40

*ஆசாரியத்துவம் மிகப்பெரிய சக்தியைத் தரித்திருக்கிறது. ஆபாசப் படங்களின் கொடிய நோயிலிருந்து அது உங்களைப் பாதுகாக்கும். அதன் ஆதிக்கத்திற்குள் நீங்கள் விழுந்துவிட்டால் அது ஒரு கொடிய நோயே. ஒருவர் கீழ்ப்படிதலுள்ளவராயிருந்தால், ஒரு அடிமைத்தனமாயிருந்தாலும்கூட, எவ்வாறு ஒரு பழக்கத்தை விட்டுவிடவேண்டுமென்பதை அது காட்டும். ஆசாரியத்துவத்தைத் தரித்திருப்பவர்களுக்கு அந்த அதிகாரமிருப்பதால், இந்த ஆதிக்கங்களை துரத்தியடிக்க அதை அவர்கள் பயன்படுத்தவேண்டும்.*

|v41

*என்ன நடந்துகொண்டிருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ளவும் விழித்துக்கொள்ளவும் ஒரு எச்சரிக்கை மணியை நாம் எழுப்பி, சபை அங்கத்தினர்களை எச்சரிக்கவேண்டும். பெற்றோர்களே விழிப்புடனிருங்கள், இந்த கொடுமை உங்கள் குடும்ப வட்டத்தைப் பயமுறுத்தலாமென்பதால் எப்போதும் கவனமாயிரு*

ங்கள்.

|v42

நன்னடத்தையின் ஒரு தரத்தை நாம் போதிக்கிறோம், சாத்தானிடமிருந்து வருகிற திருமணத்திற்கான அநேக மாற்று ஏற்பாடுகளிலிருந்து அல்லது போலிகளிலிருந்து அது நம்மைப் பாதுகாக்கும். சுவிசேஷத்தின் கொள்கைகளுடன் இணக்கமில்லாத எந்த உறவையும் ஏற்படுத்துவதற்கான எந்த தூண்டுதலும் தவறாக இருக்கவேண்டுமென்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். “துன்மார்க்கமானது எப்போதுமே மகிழ்ச்சியாயிருந்ததில்லை”13 என்பதை மார்மன் புத்தகத்திலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம்.

|v43

அவைகள் பிறவியிலேயே அமைந்தது, தூய்மையில்லாத இயற்கைக்கு மாறான தன்மைகள் பிறவிக்குணமென்பதால் அவர்கள் உணர்வதை மேற்கொள்ள முடியாதென சிலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல! ஏன் நமது பரலோகப் பிதா அதை யாரோ ஒருவருக்குச் செய்யவேண்டும்? அவர் நமது *பிதா* என்பதை நினைவுகூருங்கள்.

|v44

“உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு தேவன் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்”14 என பவுல் வாக்களிக்கிறான். சபையின் எந்த அங்கத்தினருக்கும் தகுதியில்லாத பழக்கங்களை விட்டுவிடவும், ஒரு அடிமைத்தனத்தை மேற்கொள்ளவும், அதிலிருந்து வெளியே வரவும் நீங்கள் நினைத்தால் உங்களால் முடியும். ஆல்மா எச்சரித்ததைப்போல நாம் “இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும்”15.

|v45

“தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பை கசப்புமென்றும் சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!”16 என ஏசாயா எச்சரித்தான்.

|v46

சில ஆண்டுகளுக்கு முன்பு, அல்புகொயர்குயுவிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு நான் சென்றிருந்தேன். வகுப்புக்கு ஒரு பூனைக் குட்டியைக் கொண்டுவந்த ஒரு மாணவனைப்பற்றி ஆசிரியர் என்னிடம் சொன்னார். நீங்கள் கற்பனை செய்வதைப்போல அது எல்லாவற்றிற்கும் தடங்கலாயிருந்தது. பிள்ளைகளுக்கு முன்பாக அந்த பூனைக்குட்டியைத் தூக்கிப்பிடிக்க அவள் சொன்னாள்.

|v47

*“இது ஆண் குட்டியா அல்லது பெண் குட்டியா?” என ஒரு பிள்ளை கேட்கும் வரை எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருந்தது.*

|v48

*அந்த பாடத்திற்குள் போக விரும்பாத ஆசிரியர் சொன்னார், “அதைப்பற்றி க வலைவேண்டாம். இது ஒரு பூனைக்குட்டி”.*

|v49

*ஆனால் அவர்கள் பிடிவாதமாயிருந்தார்கள். இறுதியாக ஒரு மாணவன் தனது கைகளை உயர்த்திச் சொன்னான், “அதை எப்படி கண்டுபிடிப்பதென்று எனக் குத் தெரியும்”.*

|v50

*இது தவிர்க்க முடியாததென்பதை உணர்ந்த ஆசிரியர் கேட்டார், “எவ்வாறு நீ சொல்வாய்?”*

|v51

*“நீங்கள் இதற்கு வாக்கெடுப்பு நடத்தலாம்” என அந்த மாணவன் சொன்னான் .*

|v52

*இந்தக் கதையைக் கேட்டு நீங்கள் சிரிக்கலாம், ஆனால் நாம் எச்சரிக்கையாய் இல்லாவிட்டால், இன்றைய மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் மட் டுமின்றி, ஒரு வாக்கெடுப்பு எப்படியாவது தேவனின் விதிகளின், இயற்கையி ன் வடிவங்களை மாற்றுவதைப்போல நினைத்து, ஒழுக்கக்கேட்டை சட்டப்பூ ர்வமாக்கும் விதிகளை மாற்ற வாக்கெடுப்பும் நடத்துவார்கள். இயற்கைக்கு மாறான ஒரு சட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவது சாத்தியமாகாது. உதார ணமாக, புவிஈர்ப்பு விதிக்கு எதிரான ஒரு வாக்கெடுப்பு எந்த நன்மையைச் செ ய்யும்?*

|v53

*உலகத்தோற்றத்திற்கு முன்பே, ஒழுக்கம் மற்றும் சரீரப்பிரகாரமான விதிகள் மாற்றமுடியாதபடி கட்டளையிடப்பட்டிருந்தன17, அவைகளை மாற்றமுடி யாது. யுத்தங்களினாலும் வாக்கெடுப்புகளாலும் ஒழுக்கத் தரங்களை மாற்றமு டியாதென்பதை மீண்டும் மீண்டும் வரலாறு காட்டியிருக்கிறது. அடிப்படை யில் தவறான அல்லது தீமையானவைகளை சட்டப்பூர்வமாக்குவது, பகலுக்கு ப் பின் இரவு வருவதைப்போன்று, வேதனையையும் தண்டனைகளையும் தடு*

*க்காது.*

|v54

*எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், நமது பாதையிலிருக்க நாம் தீர்மானித்தி ருக்கிறோம். சுவிசேஷத்தின் கொள்கைகளுக்கும், விதிகளுக்கும் நியமங்களுக்கு ம் நாம் நிலைத்திருப்போம். தெரிந்தோ அல்லது தெரியாமலோ, அவர்கள் த வறாகப் புரிந்திருந்தால் அது அப்படியே இருக்கட்டும். நற்குண தரங்களை ந ம்மால் மாற்றமுடியாது, நாம் மாற்றவும் மாட்டோம். தேவனின் விதிகளுக்கு நாம் கீழ்ப்படியாதிருக்கும்போது நமது பாதையை நாம் சீக்கிரமே இழந்துவிடு வோம். குடும்பத்தை நாம் பாதுகாக்கவில்லை என்றால், ஆதரிக்கவில்லை என் றால் நாகரீகமும் நமது சுதந்தரங்களும் நிச்சயமாக அழிந்துபோகும்.*

|v55

*அவர் சொல்லுவதை நாம் செய்யும்போது கர்த்தர் கட்டுப்படுத்தப்பட்டவரா யிருக்கிறார், ஆனால் அவர் சொல்வதை நாம் செய்யாமலிருக்கும்போது நமக் கு வாக்குத்தத்தமில்லை.18*

|v56

*பாவத்தின், குற்றத்தின், அல்லது முரண்பாட்டின் ஒரு சிறையிலிருக்கும் ஒவ் வொரு ஆத்துமாவுக்கும் வாசலுக்கான ஒரு திறவுகோலிருக்கிறது. "மனந்திரும் புதல்" என திறவுகோலில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்த திறவுகோலை எவ் வாறு பயன்படுத்துவதென்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால், எதிரியால் உங்க ளை பிடித்துக்கொள்ள முடியாது. சோதனைக்காரனின் அச்சுறுத்தும் வல்ல மையைவிட மனந்திரும்புதல், மன்னிப்பு என்ற இரண்டு கொள்கைகள் பெலத் தில் அதிக வல்லமை கொண்டிருக்கிறது. தகுதியில்லாத ஒரு பழக்கத்திற்கோ அல்லது ஒரு போதையின் அடிமைத்தனத்திலோ நீங்கள் கட்டுப்பட்டிருந்தால் , தீங்கு விளைவிக்கும் அதை விட்டுவிடவேண்டும். தூதுவர்கள் உங்களுக்குக் க ற்றுக்கொடுப்பார்கள்19 இந்த கடினமான நேரங்களின்போது ஆசாரியத்துவத் தலைவர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள்.*

|v57

*மனந்திரும்புதலைவிட தேவனின் தாராளம், இரக்கம், கிருபை வேறெங்கும் வெளிப்படுவதில்லை. தேவகுமாரனும் நமது இரட்சகரும் நமது மீட்பருமான வரால் செய்யப்பட்ட பாவநிவர்த்தியின் நிறைவான சுத்தப்படுத்தும் வல்லமை யை நீங்கள் புரிந்துகொண்டீர்களா? அவர்கள் மனந்திரும்பினால், அவர்கள் பாடனுபவியாதிருக்கும்படி இந்தக் காரியங்களுக்காக யாவருக்கும் அவர் பா டனுபவித்தார்20 என அவர் சொன்னார். இந்த இறைத் தன்மையின் செயல்பா ட்டில், நாம் கிரயம் செலுத்தாதிருக்க நமது பாவங்களுக்காக இரட்சகர் கிரய ங்களை செலுத்தினார்.*

|v58

*உண்மையிலேயே அதை வாஞ்சிக்கிறவர்களுக்கு மீளுவதற்கு ஒரு வழியிருக்கிறது. மனந்திரும்புதல் என்பது ஒரு சோப்பைப்போல. பாவத்தின் ஆழமான கறைகளும்கூட வெளியேறும்.*

|v59

*ஆபாசப்படங்களின் பயங்கரமான தோற்றங்களை அப்புறப்படுத்தவும், குற்றத்தை கழுவிவிடவும் ஆசாரியத்துவத்தைத் தரித்திருப்பவர்கள் அவர்களோடு நோய் தடுக்கும் மருந்தை வைத்திருக்கிறார்கள். அதன்  பிடி எவ்வளவு பலமாக இருந்தாலும், நமது கெட்ட பழக்கங்களின் ஆதிக்கத்தைத் தகர்க்கவும், அடிமைத்தனத்திலிருந்து கட்டவிழ்க்கவும் ஆசாரியத்துவத்திற்கு வல்லமை இருக்கிறது. கடந்தகால தவறுகளின் தழும்புகளை அது குணமாக்கும்.*

|v60

*பாவங்களுக்காக மனந்திரும்புகிறவர்களுக்கு மன்னிப்புண்டு, கர்த்தர் அவைகளை நினைவில் வைத்திரார்.21 வெளிப்படுத்தல்கள் அனைத்திலும் இவைகளைவிட அழகான ஆறுதலளிக்கும் வார்த்தைகளை நான் அறியேன்.*

|v61

*சிலசமயங்களில், மனஸ்தாபப்பட்ட பின்பும், தண்டனைகளை அனுபவித்த பின்பும் சிலசமயங்களில் ஒருவர் தன்னையே மன்னிப்பதென்பது மிகுந்த கடினமான பாகமாகும். மன்னிப்பதென்பது மன்னிப்பே என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.*

|v62

*“எவ்வளவுக்கெவ்வளவு என் ஜனங்கள் மனந்திரும்புவார்களோ, அவ்வளவாய் எனக்கு விரோதமான அவர்கள் பாவங்களை நான் மன்னிப்பேன்”22.*

|v63

*மிகுந்த ஒழுக்கக்கேட்டின் ஒரு வாழ்க்கையிலிருந்து வெளியே வர வழியைக் கண்டுபிடிக்க போராடிக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் மனந்திரும்புதலைப்பற்றி என்னிடம் தலைவர் ஜோசப் ஸ்மித் பீல்டிங் சொன்னார்.*

|v64

*பதிலாக, பழைய ஏற்பாட்டிலிருந்து லோத்தின் மற்றும் ஒரு உப்புத் தூணாக மாறிய லோத்தின் மனைவியைப்பற்றிய விவரத்தைப் படிக்கும்படி அவளிடம் அவர் கேட்டுக்கொண்டார்.23 “இந்த வசனங்களிலிருந்து என்ன பாடங்களை நீங்கள் கற்றுக்கொண்டீர்கள்?” என பின்னர் அவளிடம் அவர் கேட்டார்.*

|v65

“துன்மார்க்கரை கர்த்தர் அழிப்பார்” என அவள் பதிலளித்தாள்.

|v66

“அப்படி அல்ல. ‘திரும்பிப் பார்க்காதே!’24 என்பது இந்த மனந்திரும்பிய பெண்ணுக்கும் உனக்கும் பாடம்” என தலைவர் ஸ்மித் சொன்னார்.

|v67

ஆபாசப்படங்களுக்கு, அல்லது எந்த அசுத்தமான செயல்களுக்கும், மிகுந்த வல்லமையான தடுப்பும் குணமாக்குதலுக்கும் எளிதானதுமாயிருப்பது அதை கவனியாதிருப்பதுவும் அதை புறக்கணிப்பதுவுமே. வேர் ஊன்ற முயற்சிக்கிற, எந்த தகுதியில்லாத சிந்தனையையும் மனதிலிருந்து அகற்றிப்போடுங்கள். சுத்தமாயிருக்க நீங்கள் தீர்மானிக்கும்போது, தேவன் கொடுத்த உங்களின் சுயாதீனத்தை நீங்கள் உறுதிசெய்கிறீர்கள். பின்னர், தலைவர் ஸ்மித் ஆலோசனையளித்ததைப்போல, “திரும்பிப் பார்க்காதிருங்கள்.”

|v68

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சமாதானமும் சந்தோஷமும் காத்திருக்கிறதென நான் உங்களுக்கு வாக்களிக்கிறேன். ஒரு ஆணும் அவனது மனைவியும் அவர்களின் பிள்ளைகளும் வீட்டில் சந்தோஷமாக இருப்பதே சபையின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இறுதி முடிவானது. கர்த்தரின் ஆசாரியத்துவத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட குணமாக்குதலைக் காண இந்த பயங்கரமான கொடிய நோய்க்கு எதிராக போராடுபவர்களுக்கு கர்த்தரின் ஆசீர்வாதங்களுக்காக நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வல்லமையைப்பற்றி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் சாட்சியளிக்கிறேன், ஆமென்.

|v69

குறிப்புகள்

|v70

1.

|v71

கோட்பாடும் உடன்படிக்கைகளும் 1:20

|v72

2.

|v73

*“குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனம்,” லியஹோனா அக்டோபர் 2004, 49*

|v74

3.

|v75

*ஆபிரகாம் 4:27--28*

|v76

4.

|v77

*ஆபிரகாம் 3:25*

|v78

5.

|v79

*2 நெப்பி 2:25*

|v80

6.

|v81

*2 நெப்பி 2:26*

|v82

7.

|v83

*1 கொரிந்தியர் 3:16*

|v84

8.

|v85

*2 நெப்பி 2:27*

|v86

9.

|v87

*மத்தேயு 13:45*

|v88

10.

|v89

*மத்தேயு 13:44*

|v90

11.

|v91

*யாக்கோபு 6:8; ஆல்மா 34:31*

|v92

12.

|v93

*ஆல்மா 42:8*

|v94

13.

|v95

*ஆல்மா 41:10*

|v96

14.

|v97

*1 கொரிந்தியர் 10:13*

|v98

15.

|v99

*ஆல்மா 13:28*

|v100

16.

|v101

*ஏசாயா 5:20*

|v102

17.

|v103

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 130:20*

|v104

18.

|v105

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 82:10*

|v106

19.

|v107

*2 நெப்பி 32:3 பார்க்கவும்*

|v108

20.

|v109

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 19:16*

|v110

21.

|v111

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 58:42*

|v112

22.

|v113

*மோசியா 26:30*

|v114

23.

|v115

*ஆதியாகமம் 19:26 பார்க்கவும்*

|v116

24.

|v117

See Boyd K. Packer, *The Things of the Soul* (1996), 116.

|v118



|v119